**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.145/2024**
**Prosecution Witness – PW.3**

| | |
|---|---|
| Name | :திரு. எடிசன் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

(Accused absent. Petition U/s.355 BNSS is filed and allowed).

முதல் விசாரணை–

நான் நெய்யூர் வடக்குத் தெருவில் வசிக்கிறேன். பால்கடை வைத்திருக்கிறேன். ஆஜர் இல்லாத எதிரி சேர்மராஜை எனக்கு் தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)

கடந்த 29.12.2021ம் அன்று மதியம் 1.00 மணியளவில் நான் கடையில் இருந்தேன். பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்த விருதுநகர் மாவட்டம், ஆலம்பட்டி மொட்டையன் சாமித் தெரு, இராமக்கிருஷ்ணன் மகன் சேர்மராஜ் மதுரை என்ற சேர்மராஜ் ஹாக்கர் திருப்பில் TN 75 E 1496 என்ற Honda Activa வாகனத்தில் வந்து அந்த வழியாக வந்த ஆ.சா.1 ஜெபராஜை போக விடாமல் வழிமறித்து இருச்சக்கர வாகனத்தை நிறுத்தினான். உடனே எதிரி சேர்மராஜ் இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஜெபராஜிடம் காட்டி இதன் உள்ளே நிறைய குண்டுகள் நிரப்பி வைத்திருக்கிறேன். உன் பாக்கெட்டில் இருக்கும் பணத்தை எடுத்துக் கொடு என்று சொல்லி ஜெபராஜை குறிபார்த்து நீட்டினான். ஜெபராஜ் அலறி சப்தம் போடவும், உடனே அந்த வழியாக வந்த சுஜின், இஸ்மாயில், அசோக் குமார், ஜெயசிங்க், நிஷாந்த், மற்றும் நானும் தடுப்பதற்காக ஓடிச் சென்றோம், உடனே எதிரி எங்களை பார்த்து குறி வைத்து காட்டி கிட்டே வந்தால் சுட்டு பொசுக்கி விடுவேன் என்று மிரட்டினான். உடனே நான் பயந்து அலறி கடையை அடைத்து விட்டு பயந்து ஓடி விட்டேன். அதன் பின் மேற்படி எதிரி ஜெபராஜ் சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.1500/–ஐ கொள்ளையடித்து

விட்டு துப்பாக்கியுடன் அவன் வந்த இருச்சக்கர வாகனத்தில் தப்பி சென்றதாகவும், அது தொடர்பாக ஆ.சா.1 இரணியல் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், கேள்விபட்டேன் எனவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.145/2024**
**Prosecution Witness – PW.4**

| | |
|---|---|
| Name | :திரு. அசோக் குமார். |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

(Accused absent. Petition U/s.355 BNSS is filed and allowed).

<u>முதல் விசாரணை</u>–

நான் நெய்யூர் அண்ணாத் தெருவில் வசிக்கிறேன். தங்கநகை செய்து கொடுக்கும் தொழில் செய்கிறேன். ஆஜர் இல்லாத எதிரி சேர்மராஜை எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)</u>

கடந்த 29.12.2021ம் அன்று மதியம் 1.00 மணியளவில் நான் கடையில் இருந்தேன். பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்த விருதுநகர் மாவட்டம், ஆலம்பட்டி மொட்டையன் சாமித் தெரு, இராமக்கிருஷ்ணன் மகன் சேர்மராஜ் மதுரை என்ற சேர்மராஜ் ஹாக்கர் திருப்பில் TN 75 E 1496 என்ற Honda Activa வாகனத்தில் வந்து அந்த வழியாக வந்த ஆ.சா.1 ஜெபராஜை போக விடாமல் வழிமறித்து இருச்சக்கர வாகனத்தை நிறுத்தினான். உடனே எதிரி சேர்மராஜ் இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஜெபராஜிடம் காட்டி இதன் உள்ளே நிறைய குண்டுகள் நிரப்பி வைத்திருக்கிறேன். உன் பாக்கெட்டில் இருக்கும் பணத்தை எடுத்துக் கொடு என்று சொல்லி ஜெபராஜை குறிபார்த்து நீட்டினான். ஜெபராஜ் அலறி சப்தம் போடவும், உடனே அந்த வழியாக வந்த சுஜின், இஸ்மாயில், எடிசன், ஜெயசிங்க், நிஷாந்த், மற்றும் நானும் தடுப்பதற்காக ஓடிச் சென்றோம், உடனே எதிரி எங்களை பார்த்து குறி வைத்து காட்டி கிட்டே வந்தால் சுட்டு பொசுக்கி விடுவேன் என்று மிரட்டினான். உடனே நான் பயந்து

அலறி ஓடி விட்டேன். அதன் பின் மேற்படி எதிரி ஜெபராஜ் சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.1500/–ஐ கொள்ளையடித்து விட்டு துப்பாக்கியுடன் அவன் வந்த இருச்சக்கர வாகனத்தில் தப்பி சென்றதாகவும், அது தொடர்பாக ஆ.சா.1 இரணியல் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், கேள்விபட்டேன் எனவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**